


25.07.2024

தலைப்புச் செய்திகள்

1. கார்கில் வெற்றி தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி கார்கில் போர் நினைவுச்சின்னத்தில் நாளை அஞ்சலி செலுத்துகிறார்.

2. மத்திய அரசின் பொது பட்ஜெட் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதம் மக்களவையில் நடைபெற வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு வலியுறுத்தினார்.

3. தமிழ்நாட்டில் புதிய முதலீடுகள் மேற்கொள்வது குறித்து முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், ஐக்கிய அமீரக வர்த்தக அமைச்சருடன் இன்று பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

4. கீழ்பவானி பாசன கால்வாய் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று மாநில அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

5. நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□□

பிரதமர் - கார்கில்

கார்கில் வெற்றி தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி, இப்போரில் இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு நாளை கார்கில் போர் நினைவுச் சின்னத்தில் அஞ்சலி செலுத்துகிறார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக ஷின்குன் - லா சுரங்கப்பாதை திட்டத்தையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

15 ஆயிரத்து 800 அடி உயரத்தில் 4.1 கிலோ மீட்டர் நீளம் அமைக்கப்பட உள்ள இந்த இரட்டை குகைப்பாதை உலகின் மிகப்பெரிய சுரங்கப்பாதையாக அமையும்.

ராணுவ வீரர்கள் விரைந்து சென்று பணியாற்றுவதோடு, ராணுவ தளவாட பொருட்களையும் துரிதமாக கொண்டுசெல்ல இந்த பாதை வழிகோலும்.

லடாக் பகுதியின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு இந்த குகைபாதை பெரிதும் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

□□□□□□□□□

கிரண் ரிஜ்ஜு

மத்திய அரசின் பொது பட்ஜெட் மீதான விவாதம் அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும் என்று நாடு விரும்புவதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜ்ஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மக்களவை தேர்தலில் நாட்டு மக்கள் வழங்கிய தீர்ப்பை எதிர்கட்சிகள் மதிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

சில கட்சித் தலைவர்களின் உரை நாடாளுமன்றத்தின் மாண்பை குறைப்பதாக உள்ளது என்றும் அவர் குறை கூறினார்.

தேர்தல் முடிவடைந்த நிலையில் வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை நோக்கி நாம் பயணிக்க வேண்டும் என்ற பிரதமரின் அறிவுறுத்தலை சுட்டிக்காட்டியஅவர், நிதிநிலை அறிக்கை குறித்து ஆக்கப்பூர்வமான விவாதம் அவையில் நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஆனால் எதிர்கட்சிகள் விவாதங்களில் பங்கேற்காமல் அரசியலில் ஈடுபடுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

எதிர்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபடாமல் இருக்க அவைத் தலைவர்கள் அறிவுறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மகளிர், வேளாண்மை, கட்டமைப்பு உட்பட அனைத்து துறைகளுக்கும் உரிய நிதி ஒதுக்கீட்டுடன் நம் நாட்டை 3-வது பெரிய பொருளாதார நாடாக மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு பட்ஜெட் உருவாக்கப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்

விவசாயிகளுக்கும், பழங்குடியினருக்கும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்கள் குறித்து விவாதிக்காமல் அவற்றிலிருந்து எதிர்கட்சிகள் விலகி ஓடிவிடுவதாக குறைகூறினார்.

பட்ஜெட் மீதான விவாத அமர்வில் அதுபற்றி விவாதிக்க வேண்டியது அவசியம் என்றார்.

□□□□□□□□□

ரந்தீப் சிங் சுர்ஜேவாலா

மாநிலங்களவையில் பட்ஜெட் மீதான விவாதம் இன்று மீண்டும் தொடங்கியது.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ரந்தீப் சிங் சுர்ஜேவாலா இவ்விவாதத்தில் பேசுகையில் ஏழை எளியோர், விவசாயிகள், வேலைவாய்ப்பின்மை குறித்த பிரச்சனைகளை எடுத்துரைத்தார்

பட்ஜெட்டில் விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்வதற்கான அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை என்று கூறினார்.

உணவு தானியங்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை அறிவிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

□□□□□□□□

நிதின் கட்கரி

தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கீழ் 19 ஆயிரத்து 130 கோடி ரூபாய் மதிப்பில், 5 அதிவிரைவு வழித்தடங்கள், 22 கட்டுப்பாட்டு நெடுஞ்சாலைகளை பசுமை வழித்தடங்களாக மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்

மக்களையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், 860 கிலோமீட்டர் நீள சாலைகள் பசுமை பாதைகளாக மேம்படுத்தப்படுவதாக கூறினார்.

□□□□□□□□

சுரேஷ் கோபி

நாடுமுழுவதும் ஊ.பே.பு. வாகனங்களின் விற்பனை கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துள்ளது என்று மத்திய பெட்ரோலியம் இயற்கை எரிவாயு துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இன்று எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் இதனைத் தெரிவித்த அவர், பெட்ரோலிய இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் ஊ.பே.பு. நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

□□□□□□□□

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அரசுமுறை பயணமாக இன்று லாவோஸ் சென்றடைந்தார்.

ஆசியான் இந்தியா கூட்டம், கிழக்காசிய உச்சிமாநாடு, ஆசியான் மண்டல கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான கூட்டங்களில் அவர் பங்கேற்கிறார்

இந்தியாவின் கிழக்கு கொள்கை அடிப்படையில் ஆசியான் நாடுகள் உடனான நட்புறவை வலுப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை தாம் எதிர்நோக்கி இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

□□□□□□□□□

சேகர் கபூர்

கோவாவில் வரும் நவம்பர் 20-ம் தேதி தொடங்கவுள்ள சர்வதேச திரைப்பட விழாவின் இந்திய தலைவராக திரைப்பட தயாரிப்பாளர் திரு. சேகர் கபூர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான ஆணையை மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

□□□□□□□□□

பெஞ்சமின் நெதன்யாஹு

மேற்காசிய பாதுகாப்பு கூட்டணியை வலுப்படுத்த அரபு நாடுகள் மற்றும் இஸ்ரேல் இடையே எதிர்கால ஒத்துழைப்பிற்கு வாய்ப்பிருப்பதாக இஸ்ரேலிய பிரதமர் திரு.பெஞ்சமின் நெதன்யாஹு தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் இன்று ரு.ளு. மாநாட்டில் உரையாற்றிய அவர், பாலஸ்தீனியர்கள் ஆக்கிரமிப்பு பகுதியில் கடந்த 9 மாதங்களாக போர் நீடித்து வரும் நிலையில் ஆயுதங்கள் விநியோகத்திற்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று கோரியுள்ளார்.

□□□□□□□□□

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் புதிய முதலீடுகள் மேற்கொள்வது குறித்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், ஐக்கிய அமீரக வர்த்தக அமைச்சர் அப்துல்லா பின் தவுக் அல்மரி உடன் இன்று பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது மாநில தொழிற்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா மற்றும் அரசின் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

□□□□□□□□□

ரகுபதி

போதை பழக்கத்தின் தீமைகள் குறித்து பள்ளி மாணாக்கரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பல்துறை உள்ளடக்கிய குழு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாநில சட்ட அமைச்சர் திரு. ரகுபதி தெரிவித்தார்.

நாகப்பட்டினத்தில் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று உரையாற்றிய அவர், இதற்காக போட்டிகளும், விழிப்புணர்வு பேரணிகளும் நடைபெறுவதாக கூறினார்.

மாணவர்களின் பாதுகாப்பை மேம்படுத்த பெற்றோருக்கும், பள்ளிக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்த மாதாந்திர கூட்டங்கள் நடைபெறுவதாக அவர் கூறினார்.

□□□□□□□□

முத்துசாமி

ஈரோடு மாவட்டம் கீழ்பவானி பாசன கால்வாய் பணிகள் முடிக்கப்பட்டு அடுத்தமாதம் 15-ம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று மாநில வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்

ஈரோடில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 70 சதவிகித பணிகள் தற்போது நிறைவடைந்ததாக கூறினார்.

ஆன்லைன் மூலம் கட்டட அனுமதிக்கு மக்களிடையே வரவேற்பு அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□

எ.வ.வேலு

சென்னையை அடுத்த காட்டுப்பள்ளியில் அமைந்துள்ள துறைமுகத்தை பல்வேறு நகரங்களுடன் இணைக்கும் வகையிலான தச்சூர், சித்தூர் உள்ளிட்ட சாலைப் பணிகளை மாநில நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு இன்று ஆய்வுசெய்தார்.

சாலைப்பணிகளின் தற்போதைய நிலை குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்த அவர், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தினார்.

□□□□□□□□

பிரதீப்குமார்

திருச்சி தனியார் பள்ளியில் மாநில சமூக நலத்துறை சார்பில் பெண்குழந்தைகளை காப்போம்! பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்! திட்டத்தின் கீழ் வட்டார அளவிலான சதுரங்க போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் துவக்கி வைத்து பேசினார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□□

மாநகராட்சி ஆணையர்கள்

நெல்லை மாவட்டத்தின் நீர் ஆதாரமாக விளங்கும் தாமிரபரணி நதியை பாதுகாப்பதற்கான திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகராட்சி ஆணையராக இன்று பொறுப்பேற்ற திரு.சுகபத்ரா தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□□

இருவரி

சென்னை கொண்டித்தோப்பு மற்றும் சூளை பகுதிகளில் உள்ள டி.ஏ.ஐ. மருந்தகங்களை மாநில தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சி.வி.கணேசன் இன்று ஆய்வு செய்தார்.

□□□□□□□□□

வானிலை

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

மன்னார் வளைகுடா, தென் தமிழகம், மத்திய தெற்கு வங்கக்கடல், வடமேற்கு வங்கக்கடல், அரபிக்கடல் பகுதிகளுக்கு அடுத்த 5 நாட்களுக்கு மீனவர்கள் செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

□□□□□□□□□

ஒலிம்பிக்

33-வது ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் வண்ணமிகு நிகழ்ச்சிகளுடன் நாளை கோலாகலமாக தொடங்குகிறது

இதனிடையே வில்வித்தை போட்டிக்கான தகுதிச்சுற்று போட்டியில் இந்திய அணி வீராங்கனைகள் தற்போது களமிறங்கி உள்ளனர்.

ஆடவர் பிரிவில் தீரஜ், தருண்தீப் ராய், பிரவீன் ஜாதவ் ஆகியோர் களம் காண்கின்றனர்.

□□□□□□□□

கிரிக்கெட்

இலங்கை தம்புலாவில் நடைபெறும் ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நாளை பிற்பகல் 2 மணிக்கு இந்தியா - பங்களாதேஷை எதிர்கொள்கிறது

இரவு 7 மணிக்கு நடைபெறும் 2-வது அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை - பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

□□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.